# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம் மற்றும் சென்னை தொலைபேசி

BSNLEU

# நமது போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி! சொசைட்டி வட்டி 1% குறைக்க இயக்குநர் குழு முடிவு!!

11-07-2016 அன்று நடைபெற்ற சொசைட்டி இயக்குநர் குழு கூட்டத்தில் வட்டி விகிதத்தை 1 சதமாக குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு எடுக்க அடிப்படையான காரணம் நாம் நடத்திய தொடர் இயக்கங்களும், 28-06-2016 அன்று எழுச்சிமிகு தர்ணாவும் ஆகும்.

### இந்த வட்டி குறைப்பு போதுமா?

நிச்சயமாக இந்த 1% வட்டி குறைப்பு என்பது போதாது. மாறாக மற்ற சொசைட்டிகளில் கொடுப்பது போல் 13% வட்டி விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை. தற்போது சென்னை சொசைட்டி வட்டி விகிதம் 16%லிருந்து 15% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

### NFTE (சென்னை தொலைபேசியின்) கபட நாடகம்

21 இயக்குநர்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் NFTE சென்னை தொலைபேசி மாநில செயலாளர் தோழர் மதிவாணன் 2 ஆண்டுகளாக வட்டி உயர்விற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் அவரின் ஒப்புதலுடன் தான் வட்டி உயர்த்தப்பட்டது. BSNL ஊழியர் சங்கம் இந்த அநியாய வட்டி உயர்வை எதிர்த்து எழுச்சிமிகு போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தியது. ஊழியர் மத்தியில் தோழர் மதிவாணனும், சொசைட்டி தலைவர் வீரராகவனும் அம்பலப்பட்டு போயினர்.

வட்டி உயர்வை குறைப்பது, நிலத்தை பிரித்து கொடுப்பது, சொசைட்டி கணக்கு வழக்குகளில் நடைபெறும் முறைகேடுகளை களையக் கோரி தமிழ் மாநில சங்கமும், சென்னை தொலைபேசி மாநில சங்கமும் மற்றும் சென்னை தொலைபேசி SEWA BSNL சங்கமும் இணைந்து 28-06-2016 அன்று மாபெரும் தர்ணாவை சென்னை பூக்கடை தொலைபேசி நிலைய வளாகத்தில் 600க்கும் மேற்பட்ட தோழர்களை திரட்டி நடத்தியது. இந்த தர்ணாவிற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று தோழர் மதிவாணன் சென்னை தலைமை பொது மேலாளரிடம் புகார் கொடுத்தார். நிர்வாகமோ அனுமதியை மறுத்து ஏராளமான காவல்துறையை அழைத்தது. அடக்குமுறைக்கு அஞ்சிடோம் என நமது தோழர்கள் கோபாவேசத்தோடு தர்ணா போராட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த போராட்டத்தின் விளைவாகத்தான் வட்டி குறைப்பு நடந்துள்ளது. NFTE கொடுத்த கருணை மனுவினால் அல்ல, சென்னை தொலைபேசி நமது தோழர்கள் 35 பேருக்கு நிர்வாகம் சம்பள வெட்டை (Dies-non) தர்ணாவில் கலந்து கொண்டதற்காக வழங்கியுள்ளது. பழிவாங்குதலை வீரத்துடன் ஏற்ற தோழர்களை மனதார பாராட்டுகிறோம்.

**மேலும் 2% வட்டி குறையும் வரை நமது போராட்டம் தொடரும்.**

### மாடல் வீடு திடீரென உதயம்

வெள்ளானூர் நிலத்தில் மாதிரி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக NFTE இப்போது அறிவிக்கிறது. 12-03-2016 அன்று நடந்த RGB கூட்டத்தில்கூட ஒப்புதல் பெறாமல் மூடு மந்திரமாய் சொசைட்டி நிர்வாகம் செயல்பட்டு திடீரென மாடல் வீடு என அறிவிப்பது ஏன்? அதற்கான நிதி எங்கிருந்து வந்தது? யார் கட்டினார்கள்? எப்போது டெண்டர் விடப்பட்டது. எங்கு ஒப்புதல் பெறப்பட்டது. எல்லாம் வீர-மதி ரகசியம் தானோ? நிலத்தை பிரித்துக்கொடு என 14900 உறுப்பினர்கள் விண்ணப்பித்திருந்த போதும் யாருக்கும் சொல்லாமல் யாருக்கும் தெரியாமல் ரகசிய மாதிரி வீட்டை கட்டி அடுக்கு மாடி கட்டுவோம் என சென்னை தொலைபேசி NFTE மோடி மஸ்தான் வேலை செய்கிறது. உறுப்பினர்களுக்கே நிலம் சொந்தம் என்பதை அமல்படுத்தும் வரை நமது போராட்டம் தொடரும். அடுக்கு மாடி குடியிருப்பு அடுக்கடுக்காய் ஊழலுக்கு வழிவகுக்கும். ஒரு சிலரின் கஜானா நிறையும்.

**எனவே நமது போராட்டம் தொடரும்.**

*தோழமை வாழ்த்துக்களுடன்*

**A.பாபு ராதாகிருஷ்ணன்**
மாநிலச் செயலாளர், தமிழ் மாநிலம்

**K.கோவிந்தராஜ்**
மாநிலச் செயலாளர், சென்னை தொலைபேசி

Scanned by CamScanner